3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(உ) செண்டூர் வெடி விபத்து, வெடிபொருளின் தன்மை குறித்த விசாரணை மேற்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம், சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சபையில் விழுப்புரம் மாவட்டத்தில், செண்டூர் என்ற கிராமத்தில் நடந்த வெடிபொருள் விபத்து பற்றிக் கவன ஈர்ப்பு கொண்டு வரப்பட்டு, அனைத்துக் கட்சிகளினுடைய பிரதிநிதிகளும் அதில் கலந்துகொண்டு பேசினார்கள். அதனால் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகள் பற்றி நாம் விரிவாக விவாதித்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியைக்கொண்டு உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்ற ஒரு பதிலையும் இங்கே தந்தார்கள். ஆனால், இன்றைக்கு அரசு அளித்திருக்கின்ற அந்தச் செய்தி வெளியீட்டில், மூத்த அதிகாரியான திரு. எம்.எப். ஃபரூக்கி அவர்களை நியமனம் செய்திருப்பதாகவும், அவர் பின்வரும் இனங்களைப் பற்றி அரசுக்கு ஒரு மாதத்திற்குள் அறிக்கை அளிப்பார் என்றும் சொல்லி, சில இனங்கள்—5 இனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவையாவன:—*

"1. வெடிமருந்துகள் சேமிப்பு, விற்பனை, எடுத்துச் செல்லுதல் மற்றும் பயன்பாடு ஆகியவை குறித்து அரசுத் துறைகள் தடையின்மைச் சான்றிதழ் அளிப்பதற்குத் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் ஆணைகளை ஆய்வு செய்தல்;

2. 7-4-2007 அன்று நடந்ததைப்போன்ற வெடிவிபத்துக்களைத் தவிர்க்கும்பொருட்டு, வெடிமருந்துகள் சேமிப்பு, விற்பனை, எடுத்துச் செல்லுதல் மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் பாதுகாப்புத் தன்மையை உறுதி செய்யத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்;

3. 7-4-2007 அன்று நடந்த விபத்தில் இறந்தோர் மற்றும் காயமுற்றோர்களுக்கென, பின்வரும் வகையில் நிவாரணங்கள் அளிப்பதற்கான பரிந்துரைகள்:

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2007 ஏப்ரல் 10

(அ) காயமடைந்தோர்களுக்கான மருத்துவச் செலவு;

(ஆ) இறந்தோர் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் படிப்புச் செலவு;

(இ) இறந்தோர் குடும்பங்களில் உள்ளவர்களுக்கு அரசு வேலை வழங்குதல்;

(ஈ) விபத்தில் முழுமையாகச் சேதமுற்ற வீடுகளை மறுபடியும் கட்டவும், பகுதி சேதமடைந்த வீடுகளைச் சீரமைக்கவும், கொடுக்கப்பட வேண்டிய நிவாரணத் தொகை;

(4) உயிர், உடைமை இழப்புகளுக்கான நஷ்ட ஈட்டினை சம்பந்தப்பட்ட வெடிமருந்து உரிமம் பெற்றவர் அல்லது அவரது முகவரிடமிருந்து பெறுவதற்கான வழிவகை குறித்து அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய;

(5) இவை சம்பந்தமான பிற பரிந்துரைகள்."

இந்த இனங்களை மட்டும்தான் அவர் ஒரு மாத காலத்திற்குள் விசாரணை செய்து அறிக்கை தர வேண்டுமென்று அரசின் சார்பாகச் செய்தி வெளியீடு வந்திருக்கின்றது. ஆனால், அந்த வெடிபொருள் விபத்து நடந்த சம்பவத்தால் பெரும்பான்மையான நாட்டு மக்களுக்கு மிகப் பெரிய அச்சம் இருக்கின்றது. குறிப்பாக, மாண்புமிகு அம்மா அவர்களும் அந்த அச்சத்தைப் பத்திரிகையின் வாயிலாகத் தெரிவித்திருக்கின்றார்கள். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் வணக்கத்திற்குரிய திரு. இராமதாஸ் அவர்களும், உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். ஆனால், இருக்கின்ற ஐயப்பாடு, அந்த வெடிமருந்து எம்மாதிரியான வெடிமருந்து என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதுதான் அதில் நாங்களெல்லாம் சொன்ன முக்கியமான கோரிக்கை. அந்த இனம் இதில் விடுபட்டுப் போயிருக்கிறது. இந்த அரசுச் செய்தியிலிருந்து என்ன தெரிகிறது? வெடிமருந்துகளைத் தயாரிப்பவர்கள், எடுத்துச் செல்பவர்கள், அதை எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துகின்றனர்—ஒன்று, தேச விரோதக் காரியங்களுக்குப் பயன்படுத்துகின்றவர்களுக்கு இம்மாதிரியான அரசுச் செய்தி ஓர் ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. எம்மாதிரியான விபத்துக்கள் நடந்தாலும், தேச விரோத சக்திகள் தேச விரோதச் செயலுக்கு எடுத்துச் செல்கிறபோது, விபத்துக்கள் நடந்தாலும்,

2007 ஏப்ரல் 10] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அரசு அதைத் தீர விசாரணை செய்யாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு இந்த அரசுச் செய்தியிலிருந்து வெளியாகியிருக்கிறது. ஆகவே, அரசு இதைச் சிந்தித்து, அந்த வெடிமருந்து எம்மாதிரியான வெடிமருந்து என்ற ஆய்வினையும் அந்த விசாரணையில் உள்ளடக்க வேண்டும் என்று உங்கள்மூலமாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதல்வர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மென்மையாகப் பேசிவிட்டார்; இன்று கூர் தீட்டிக்கொண்டு வந்திருக்கிறார். வரவேற்கிறேன், வரவேற்கிறேன். ஆனால், ஒன்றை மறந்துவிடக் கூடாது. இந்த அரசு எதையும் மறைக்க விரும்பவில்லை. யார் தீவிரவாதத்திலோ, பயங்கரவாதத்திலோ ஈடுபட்டு நாட்டைக் காட்டிக் கொடுக்கின்ற காரியத்திலே ஈடுபட்டாலும், அவர்களை இந்த அரசு சும்மா விடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அண்மையிலே தமிழகத்தில் நடைபெறுகின்ற சில செய்திகள். பத்திரிகையிலே வந்த செய்திகளைப் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, யாராக இருந்தாலும், அது தி.மு.க.-வைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லது வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், பயங்கரவாதத்திற்கு ஏதோ ஒரு வகையிலே துணை போனவர்கள் அல்லது அதற்கு உதவியவர்கள், மறைமுகமாகத் துணை போனவர்கள், அவர்களையும் விடாமல் இந்த அரசு கைது செய்து நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. இப்பொழுது, இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த Terms of Reference போதவில்லை; இன்னும் தீவிரமாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விரும்புவாரேயானால், அதைக் குறித்துக் கொடுத்தால், அதையும் அதில் சேர்த்து, அதையும் அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி விசாரிக்க வேண்டும் என்று சொல்வதற்கு—எங்களுக்கு மடியிலே கனமிருந்தால்தான் வழியிலே பயம்—நிச்சயமாக அவர்களுக்கு இந்தச் செய்தியையும் அதில் இணைத்துக் கொடுத்து, 'இதையும் விசாரித்து அறிக' என்று சொல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைக் குறித்துக் கொடுத்தாரேயானால், அதை நான் இணைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.